மானியத்துடன் கூடிய, 5,000 ரூபாய் கடனை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கேட்கும் அந்த 2,000 ரூபாயை அந்த மக்களுக்கு அவர்கள் ஆதி திராவிடர்களாக இருந்தால், வட்டி இல்லாத கடனாக கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. அறிக்கை அளித்தல்.

மதிப்பீட்டுக் குழு.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழுவின் தலைவன் என்ற முறையிலே, 7-வது சட்டமன்றப் பேரவையின் முதல் அறிக்கையினை, தீயணைப்புத் துறை பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டு உள்ள நடவடிக்கைகள் குறித்து, மதிப்பீட்டுக் குழுவின் முதலாவது அறிக்கையினை, அவைமுன் வைக்கிறேன்.

6. அறிவிப்பு.

பேரவையின் அலுவல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த நிகழ்ச்சிக்குப் போவதற்கு முன், அதாவது 1981–82 ஆம் ஆண்டிற்கான வரவு—செலவுத் திட்டம்—கல்வி மானியத்தின் மீது விவாதத்தை தொடர்வதற்கு முன்பு, நான் ஒன்றைத் தெளிவுபடுத்திக்கொள்ள விரும்புகிறேன். நிறைய உறுப்பினர்கள் கல்வி மானியத்தின் மீது பேச விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள். எதிர்க் கட்சித் துணைத் தலைவர் பேராசிரியர் அவர்களும் 1 மணி நேர அவகாசம் கேட்டுள்ளார், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் 1 மணி நேர அவகாசம் கேட்டுள்ளார். நாளைக்கு உணவு மானியம் எடுக்க இருக்கிறது. விருத்தாசலத்தில் துப்பாக்கிச் சம்பவம் குறித்தும் பேச வேண்டும் என்றும் அவையில் எடுக்க வேண்டும் என்றும் நிறைய உறுப்பினர்கள் கேட்டிருக்கிறார்கள். ஆகையினால் இன்றைக்குள் முடிக்க வேண்டும் என்பதைக் கருதி மாலையிலும் அவையை வைத்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். அவையின் கருத்தை அறிய விரும்புகிறேன்.

சரி. எல்லோரும் ஒத்துக்கொள்கிறார்கள் என நினைக்கிறேன் பேரவை மாலை 4 மணியிலிருந்து 6 மணி வரை கூடும் என்று அறிவிக்கிறேன்.